# 4

# துதியின் இரு சொல் விளக்கங்கள்

நான் ஒரு இளம் பையனாக இருந்தபோது, ஞாயிற்றுக்கிழமையன்று சபை ஒன்றுகூடிவருதல் என்பது வாரத்தின் மாபெரும் சமூக நிகழ்ச்சியாக இருந்தது. உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் ஒவ்வொருநாளும் காலைமுதல் மாலைவரை தங்கள் பண்ணைகளில் வேலை செய்தனர். அந்தக் காலத்திலும் அவ்விடத்திலும் தனிப்பட்ட தொலைபேசிகள் பொதுவாக இருந்ததில்லை, எனவே மக்கள் ஆராதனைக்காகக் கூடிவரும் வாரந்திரக் கூட்டங்களில் சமூகச் செய்திகளைப் பெற்றுக்கொள்வதுண்டு. முற்றத்தில் உள்ள பெரிய மரத்தின்கீழ் ஆண்கள் வழக்கமாக ஒன்றுகூடி பேசுவார்கள். பெண்கள் உள்பக்கம் சென்று ஆராதனை தொடங்கும் வரையிலும் பேசுவார்கள். ஆராதனைக்கென்று குறிக்கப்பட்ட நேரம் நெருங்கும்போது, பாடல்களில் வழிநடத்துபவர் ஒரு பாடலை அறிவித்து கட்டிடத்தின் உள்ளே இருப்பவர்களுடன் சேர்ந்து பாடத்தொடங்குவார். பின்பு வெளியே உள்ள ஆண்கள் உள்ளே வந்து ஆராதனைக் கூட்டத்திற் காகத் தங்கள் இருக்கைகளில் அமருவார்கள்.

“பாடி அவர்களை உள்ளே அழைத்தல்” என்ற இந்த நடைமுறையும், அத்துடன் பிரசங்கித்தல் என்ற விஷயமும் ஆராதனை நேரத்தில் பெரும்பகுதியை அடிக்கடி எடுத்துக்கொண்டது என்ற உண்மையும் சேர்ந்து, பாடுதலும் “தொடக்க ஜெபமும்” உண்மையான ஆராதனைக்கு தொடக்க நிகழ்ச்சிகள் என்ற கருத்துணர்விற்கு வழிநடத்திற்று. இந்தக் கருத்துணர்வானது அடிக்கடி பிரசங்கியார்களால் நோக்கமற்ற வகையில் பேணப்பட்டது. இராபர்ட் வெபர் என்பவர் தான் ஊழியம் செய்த சபைக்குப் பிரசங்கிக்க வந்த ஒரு பிரசங்கியாரைப் பற்றிப் பின்வருமாறு கூறினார். அழைக்கப்பட்ட இந்தப் பேச்சாளர் அவரிடத்தில் ஆராதனை தொடங்கும் முன்பு வந்து, ‘‘தொடக்க நிகழ்ச்சிகளை விரைவாக முடியுங்கள். இன்று நான் ஏராளமானவற்றைக் கூறவேண்டியுள்ளது” என்று கூறினார்.[1] இது ஜெபமும் பாடுதலும் ஆராதனையை நமக்கு அறிமுகப் படுத்துவதைக் காட்டிலும் சிறிதே அதிகம் செய்கிறதான ஆராதனையின் சிறு வெளிப்பாடுகள் என்று சித்தரிக்கிறது.

“தொடக்க நிகழ்ச்சிகள்” என்று அழைக்கப்படும் இவ்விஷயங்களை நாம் நீக்கிப் போடக்கூடாது; மாறாக, நாம் ஆராதனையில் இவற்றின் மதிப்பை வலியுறுத்தும் வகையில் இவற்றை ஒளியூட்ட வேண்டும். பவுலும் சீலாவும், தங்கள் கால்கள் தொழுமரத்தில் கட்டப்பட்ட நிலையில்

பிலிப்பியச் சிறைச்சாலையின் உட்காவல் அறையில் தேவனிடத்தில் ஜெபித்து, அவரைத் துதித்துப் பாடல்களைப் பாடியபோது அவர்கள் வெறும் தொடக்க நிகழ்ச்சிகளில் மட்டுமே ஈடுபட்டு இருந்தனர் என்று நான் நினைக்கவில்லை (நடபடிகள் 16:23-25). அவர்கள் ஆராதித்துக் கொண்டிருந்தனர்! நாம் முந்திய பாடங்களில் கண்டுள்ளதுபோல, மனிதர்கள் தேவனை ஆராதிக்கும்போது, அவர் தமது வல்லமையை வியப்புக்கு உரிய வழிகளில் காட்சிப்படுத்துகிறார்.

## பாடலில் ஆராதித்தல்

தேவனைத் துதித்தும் அவரை வழிபட்டும் பாடல் பாடுதல் என்பது குறைந்தபட்சம் யாத்திராகமம் 15ம் அதிகாரம் வரையிலும் பின்னோக்கிச் செல்கிறது. மோசே எகிப்திய அடிமைத்தளையில் இருந்து மக்கள் விடுவிக்கப்பட்டதைக் கொண்டாட அவர்களைப் பாடலில் வழிநடத்தினார். அந்தப் பாடல் முழுவதிலும், தேவனுடைய மகத்துவம், வல்லமை, மற்றும் மேன்மை ஆகியவற்றிற்காக அவர் துதித்து மேன்மைப்படுத்தப்படுகிறார். இசைக்கு ஏற்ப வசனங்களை அமைத்தல் என்பது வார்த்தைகளை நினைவில் வைக்கக்கூடிய திறமையை உயர்த்துகிறது. இது அவ்வார்த்தைகள் மக்களின் வாழ்வில் முக்கிய நிகழ்ச்சியை நினைவு கூருவதற்கானவைகளாக இருக்கும்போது விசேஷித்த வகையில் முக்கியமானதாக உள்ளது. இந்தப் பாடல்கள் மனனம் செய்யப்பட்டு தலைமுறை தலைமுறைதோறும் கையளிக்கப்பட்டிருக்கும். பின்வரும் ஒவ்வொரு சந்ததியும் அப்போது தேவனுடைய மேன்மைக்காக அவரைத் துதிக்க முடியும்.

தேவன் தண்ணீரைக் கொடையாகக் கொடுத்ததை நினைவு கூருவதற்கு, எண்ணாகமம் 21:17, 18ல், ஒரு சுருக்கமான பாடல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வேளையில் தண்ணீர் ஒரு பாறையில் இருந்தல்ல, ஆனால் ஒரு கிணற்றில் இருந்து வந்தது. நியாயாதிபதிகள் 5ம் அதிகாரம் முற்றிலும் தேவன் இஸ்ரவேல் மக்களைக் கானானிய அரசரான யாபீன் என்பவனிடம் இருந்து விடுவித்தமைக்காக அவரை மேன்மைப்படுத்தும் வகையில், தெபொராள் மற்றும் பாரூக் ஆகியோரால் பாடப்பட்ட பாடலுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து வந்த தலைமுறைகளில் இப்பாடல்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்று நாம் அறிவதில்லை, ஆனால் அவைகள் தேவனுடைய மக்கள் அவரை ஆராதிக்கும் வழிமுறைகளில் ஒன்றாகப் பாடல்களை நீண்ட காலமாகப் பயன்படுத்தி வந்துள்ளனர் என்ற உண்மையை நிலைநாட்டுகின்றன. தாவீது அரசர் பாடுதலுக்கு ஆராதனையில் ஒரு புதிய மேன்மையான இடத்தைக் கொடுத்தார். சங்கீதங்கள் பெரும்பாலும், இசைக்கு அமையும்படி எழுதப்பட்டன. அவற்றில் சில தேவனுக்குத் துதிகளைப் பாடுதலைச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன (சங்கீதம் 30:4; 95:1; 96:1, 4; 98:1; 147:7; 149:1). தாவீதின் சங்கீதங்கள் ஜெபஆலய ஆராதனையிலும் தேவாலய ஆராதனையிலும் பயன்படுத்தப்பட்டன.

கிறிஸ்தவமும்கூட பாடும் மதமாகவே உள்ளது. கர்த்தருடைய

பந்தியை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து, இயேசுவும் அவரது சீஷர்களும் ஒரு ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினர் (மத்தேயு 26:30). கொரிந்து நகரிலிருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் கொடுத்த அறிவுரையானது, தொடக்ககால சபை தனது ஆராதனை கூடுகைகளில் பாடுதலைப் பயன்படுத்திற்று என்பதை வெளிப்படுத்துகிறது (1 கொரிந்தியர் 14:15; வசனம் 26ஐக் காணவும்). பாடுதல் என்பது ஆழமான பெருந்துக்கத்தில் இருந்து முற்றிலும் பரவசநிலை வரையிலான பலவகையிலான உணர்வு களை வெளிப்படுத்துவதற்கு, உண்மையில் உலகின் ஒவ்வொரு கலாச் சாரத்திலும் பயன்படுத்தப்படுகிறது. தேவன் மீதான அன்பு, நன்றியுணர்வு, சந்தோஷம், அல்லது பாவத்திற்கு மனம் வருந்துதல் என்பதைக்கூட ஆராதனையில் நாம் செய்யும் வேறு எந்தச் செயலும் இவ்வளவு சிறப்பாக வெளிப்படுத்துவதில்லை. துதித்தல் என்பது பாடலில் மிகச்சிறப்பாக வெளிப்படுத்தப்படுகிறது. பாடுதல் என்பது ஆவியை உயர்த்தி சபை முழுவதற்கும் பக்திவிருத்தியூட்டுகிறது. ஜேக் ஹேஃபோர்டு என்பவர், "ஆராதனை என்பது பாடல் இன்றி சாத்தியமானதாகலாம், ஆனால் அதன் அழகு, கம்பீரம், மகத்துவம், அல்லது மேன்மை ஆகியவற்றிற்கு, அல்லது அதன் மென்மைத்தன்மை மற்றும் நெருங்கிய தன்மை ஆகியவற்றிற்கு அதை [பாடலை]க் காட்டிலும் வேறெதுவும் அதிகம் பங்களிப்பதில்லை" என்று கவனித்துள்ளார்.[2]

### பாடுதலினால் மாத்திரம்

தொடக்ககால சபையானது, பழைய ஏற்பாட்டு எபிரெய ஆராதனையிலிருந்து, குறிப்பாக ஜெபஆலய ஆராதனையில் இருந்து அதிகமானவற்றைத் தரவழைத்திருந்தது என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. அவர்களின் பாடல்களில் பலவற்றிற்குச் சங்கீதங்கள் கருத்தளித் துள்ளன.[3] இருப்பினும், தூய்மையான பாடுதலின் உதயம் என்பது பழைய ஏற்பாட்டு ஆராதனைக்கும் முதல் நூற்றாண்டு சபையின் ஆராதனைக்கும் இடையில் உள்ள கவனத்தை ஈர்க்கும் வேறுபாடாகும். தேவாலய ஆராதனையில் பாடுதல் என்பது இசைக்கருவிகளுடன் இணைந்ததாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட லேவியர்களின் குழுவினரால் பாடப்பட்டதாகவும் இருந்தது (1 நாளாகமம் 15:16; 23:5; 25:6, 7). சங்கீதங்கள், பல சந்தர்ப்பங்களில், இசைக்கருவிகளைத் துணைக்கு அழைத்தன (சங்கீதம் 33:2; 43:4; 49:4; 71:22; 92:3; 98:5; 147:7; 149:3; 150:3-5).

தேவன் பழைய ஏற்பாட்டு ஆராதனையில் இசைக்கருவிகளின் பயன்பாட்டை ஏற்றுக்கொண்டிருந்தபோதிலும், அவற்றைத் தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் தங்கள் சபைகூடுகைகளில் பயன்படுத்தவில்லை. இசைக்கருவிகளில் இசைத்தல் என்பது புதிய ஏற்பாட்டு ஆராதனையில் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. பல நூற்றாண்டுகளாக, வரலாற்றாளர்கள் தொடக்ககால சபையில் இசைக்கருவிகள் பயன்படுத்தப் பட்டிராதது ஏன் என்பதற்குக் குறிப்புகள் எதையாவது தருகிற பழங்காலப் பதிவேடுகளைக் கண்டறிய அகழ்வாராய்ச்சி செய்துள்ளனர். ஏன் என்பதற்கு வரலாற்றாளர்கள் இன்னமும் சந்தேகம் உடையவர்களாக

இருந்தபோதிலும், இப்படிப்பட்ட இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதில் சந்தேகமே இல்லை. ஒளபரி ஜான்சன் என்பவர், ‘‘ஒவ்வொரு வகையிலுமான இசைக்கருவிகள் யாவும் சீஷர்களுக்குக் கிடைத்திருந்தது, அவைகள் பயன்படுத்தப்பட்டதற்கு வரலாற்றுப் பூர்வமான முன்மாதிரியும் இருந்தது, இருப்பினும் தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் எந்தவிதமான இசைக்கருவிகளையும் கொண்டிராமலேயே தங்கள் கர்த்தரைத் துதித்துப்பாடினர். மாற்றமானது தெளிவானதாக மற்றும் நாடகத்துவமானதாக இருந்தது’’ என்று குறிப்பிட்டார்.[4]

பழைய ஏற்பாட்டு ஆராதனையில் சிலவற்றிற்குத் தேவன் இசைவுறுதி அளித்தார் என்ற உண்மையானது, புதிய ஏற்பாட்டு சபையின் ஆராதனையில் அவர் அதற்கு இசைவுறுதி அளித்துள்ளதற்குத் தாக்கம் எதையும் கொண்டிருக்க வேண்டும் என்று அவசியமில்லை. அவர் தகனபலிகள், தூபவர்க்கத்தை எரித்தல், மற்றும் கணக்கற்ற பலிகள் ஆகியவற்றிற்கும் இசைவுறுதி அளித்திருந்தார்; ஆனால் இந்த நடைமுறைகளைக் கிறிஸ்தவர்கள் தங்கள் ஆராதனையில் தொடரவில்லை. இன்றைய நாட்களில் உள்ள மதத்தலைவர்களில் பெரும்பான்மையானவர்கள், தொடக்ககால சபையின் ஆராதனையை மீளக்கட்டி எழுப்புவதற்குக் கட்டாயப்படுத்துதல் எதையும் உணருவதில்லை என்று கூறுதல் சரியாக இருக்கும் என்றே நான் நினைக்கிறேன். தொடக்ககால சபையார் செய்தது என்ன என்பதைக் கண்டறிந்து, அதை அப்படியே செய்தல் நமக்கு விரும்பத்தக்கதாக இருக்கும் என்பது உறுதி. ஆகையால், “அவர்கள் தங்கள் பொது சபைகூடுகைகளில் செய்த விஷயங்களை ஏன் அவ்வாறு செய்தனர்?” என்று கேட்பது ஏற்புடையதாக இருக்கிறது. அந்தத் தொடக்ககால சபைகளை வழிநடத்தப் புதிய ஏற்பாடு எழுதப்பட்டிருந்ததில்லை; பழைய ஏற்பாடே அவர்களின் வேதவசனமாக இருந்தது. இருந்தபோதிலும், அவர்கள் ஆராதனையில் ஒரு புதிய யுகத்தை இயேசு தொடங்கி வைத்திருந்தார் என்பதை உணர்ந்து அறிந்தனர் (யோவான் 4:23, 24) தேவன் இனியும் எருசலேமில் உள்ள உலகப்பிரகாரமான கட்டிடமாகிய தேவாலயத்தில் வாசம் பண்ணுவதில்லை என்று அவர்கள் அறிந்தனர் (1 கொரிந்தியர் 6:19, 20). தொடக்ககால கிறிஸ்தவ சபைக்கூடுகைகளில், சில பழைய ஏற்பாட்டு மற்றும் ஜெபஆலயப் பாரம்பரியங்கள் தழுவிக் கொள்ளப்பட்டன, ஆயினும் அவர்கள் ஆராதனைக்குத் தங்களுக்கான அறிவுறுத்துதல்களை அப்போஸ்தலர்களிடத்தில் இருந்து பெற்றனர் என்ற முடிவை நாம் தவிர்க்க இயலாது. தேவனுடைய ஏவுதல் பெற்ற இம்மனிதர்கள் தங்கள் செய்தியைப் பரிசுத்த ஆவியானவரிடத்தில் இருந்து பெற்று அதை அற்புத அடையாளங்களினால் நிரூபித்தனர்.

முதல்-நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் விஷயங்களைத் தேவனுடைய வழியில் செய்யத் தங்களையே ஒப்புக்கொடுத்திருந்தனர் என்பது நாம் அவர்களைப் பற்றி அறியும் ஒரு உண்மையாக உள்ளது (நடபடிகள் 2:42; 4:19, 20; 5:29). அவர்கள் தாங்கள் செய்தவற்றை, தேவனிடத்தில் இருந்து வந்ததான அப்போஸ்தலர்களின் உபதேசத்தினிமித்தம் செய்திருக்க

வேண்டும் (மத்தேயு 16:17ஆ; 1 கொரிந்தியர் 2:9-11). தொடக்ககால சபைக்கு அறிவுறுத்துதலைக் கொடுத்துக்கொண்டிருந்த, ஆவியானவரின்-ஏவுதல் பெற்ற அதே மனிதர்களால் புதிய ஏற்பாடு எழுதப்பட்டது. அப்போஸ்தலர்கள் ஆராதனையின் உண்மையான நோக்கத்தை அறிந்திருந்தனர், மற்றும் அவர்களின் அறிவுறுத்துதல், தொடக்ககால சபைக்கு தேவனுக்குப் பிரியமான ஆராதனைக்கான அறிவுறுத்துதலை அளித்திருந்தது. சபையானது ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்பியிருந்தால், அவர் அந்த அறிவுறுத்துதலை அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்திருக்கலாம்-ஆனால் அவர் அவ்வாறு கொடுத்திருக்கவில்லை - என்று நாம் முடிவு செய்தல் பாதுகாப்பானதாகவே இருக்கும். உண்மையில் ஆராதனை என்பது என்ன என்றும் தேவன் ஆராதனையானது நிறைவேற்ற வேண்டும் என்று விரும்பும் விஷயம் என்ன என்றும் நாம் புரிந்துகொண்டால், அந்த செயல்முறையில் இசைக்கருவிகள் பங்களிப்பதில்லை என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். உண்மையில், இசைக்கருவிகள் நமது கவனக்குவிப்பைத் தேவனிடம் செலுத்துவதற்குப் பதில் இசை நிகழ்ச்சிமீது செலுத்தும்படி நம்மை விலக்குகின்றன. எவரெட் ஃபெர்குசன் என்பவரின் பின்வரும்கூற்றை நான் ஒப்புக்கொள்கிறேன்:

> இசைக்கருவிகளில் இசைத்தலின் காணிக்கையானது கிறிஸ்தவ ஆராதனையின் ஆவிக்குரிய இயல்புக்குச் சீர்பொருத்தமாக உள்ளதா என்பது பற்றி உண்மையான கேள்வி உள்ளது. இயந்திரத்தனமான செயல் என்ற வகையில், இசைக்கருவிகளில் இசையை உண்டாக்குதல் என்பது ஆவிக்குரிய ஆராதனையில் இருந்து, அதாவது, மனிதனின் ஆவிக்குரிய இயல்பின்மூலம் வருவதில் இருந்து வேறுபட்டுள்ளது. இங்கு கிறிஸ்தவர்கள் தங்கள் சிந்தனையை வழிநடத்தத் தங்களின் உள்ளுணர்வு சார்ந்த முன்னுரிமைகளை அனுமதிக்கக் கூடாது, ஆனால் ஆராதனையின் இயல்பு பற்றிப் புதிய ஏற்பாட்டுக் கூற்றுகளில் இருந்து உதிக்கும் தங்கள் ஆராதனையின் இறையியலை அனுமதிக்க வேண்டும்.[5]

ஆராதனை நிறைந்த பாடுதல் என்பது ஆவி மற்றும் கருத்து என்ற இரண்டையும் ஆட்கொள்ள வேண்டியதாக இருந்தது (1 கொரிந்தியர் 14:15). பின்வரும் வசனப்பகுதிகள் சபைகூடுகையின் ஆராதனையைக் குறிப்பாகச் சிந்தையில் கொண்ட சந்தர்ப்பப்பொருள்களைத் தெளிவாக உரைக்காவிட்டாலும், கிறிஸ்தவப் பாடுதலின் நோக்கம் பற்றி இவ்வசனப் பகுதிகள் நமக்குக் கூறுபவை, சபைகூடுகை உட்பட விரிவான சந்தர்ப்பப் பொருளைக் கொண்டிருக்க வேண்டும்.

> துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி (எபேசியர் 5:18, 19).

> *கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி (கொலோசெயர் 3:16).*

*இவ்விரு வசனப்பகுதிகளுமே கிறிஸ்தவப் பாடுதல் என்பது தேவனை நோக்கிய இருதயத்தின் விருப்பம் என்று விளக்கப்படுத்துகின்றன. பாடுதல் என்பது நமக்குள் இருக்கும் ஆவியின் வெளிப்பாடாகவும் இருக்க வேண்டும். பாடும்போது இசைக்கருவிகளை இசைத்தல் என்பது, மாம்சத்திற்குப் பிரியமானதாக இருப்பதால் தனிப்பட்ட வகையில் நிறைவளிக்கலாம், ஆனால் அது ஆராதனையின் நோக்கம் அல்ல. ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லுதல் என்பது பாடுதலின் மற்ற நோக்கங்களாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இதை இசைக்கருவிகள் செய்ய முடியாது.*

*கடைசியாக, இவ்விரு வசனப்பகுதிகளும் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுகிற மூன்று வகையான பாடல்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. "சங்கீதங்கள்" என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டின் சங்கீதங்கள் பாடுதலைக் குறிப்பிடுகிறது. "கீர்த்தனைகள்" என்பவை தேவனைத் துதித்து அவரை ஆராதிக்கும் அல்லது கர்த்தரைப் பற்றிய பாடல்களாக உள்ளன.[6] "ஞானப்பாட்டுகள்" என்பது சபையிலுள்ள தனிப்பட்ட உறுப்பினர்களால் இயற்றப்பட்டு ஆவிக்குரிய செய்தியைத் தாங்கி நிற்கும் "ஆவிக்குரிய பாடல்களுக்கான" பொதுச்சொற்றொடராக உள்ளது. ஹேஃபோர்டு என்பவரின் கூற்றுப்படி, இவைகள் தொடக்ககால சபையில் தனிச்சிறப்புடையவைகளாக இருந்தன, ஏனென்றால் இவைகள் ஆவிக்குரிய மக்களால் மாத்திரம் இயற்றப்பட்டிருந்தன.[7] ஒவ்வொரு வகைப் பாடலிலும், பாடலின் இராகம் அல்ல, ஆனால் வார்த்தைகளே நோக்கத்தை நிறைவேற்றுகின்றன. பாடலின் இராகமானது வார்த்தைகளை நினைவுகூருவதில் நமக்கு உதவுகிறது, ஆனால் தேவனுக்கும் ஒருவர் மற்றவருக்கும் அளிக்கும் செய்தியானது வார்த்தைகளினால்தான் அறிவிக்கப்படுகிறது. இசைக்கருவிகளில் இசைத்தல் என்பது அந்த இராகத்தை அதிகம் நினைவுகூரத்தக்கதாக்குவதில்லை, அல்லது அது வார்த்தைகளில் அறிவிக்கப்படும் செய்திக்குப் பங்களிப்பதும் இல்லை. ஓசியா இஸ்ரவேல் மக்களைத் தேவனிடத்தில் திரும்புமாறு அழைக்கையில், அவர், "வார்த்தைகளைக்கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; ... நாங்கள் எங்கள் உதடுகளின் காளைகளைச் செலுத்துவோம்" என்று அவர்களிடத்தில் வேண்டிக்கொண்டார் (ஓசியா 14:2). தேவன் நமது உதடுகளின் கனியை விரும்புகிறார்!*

*சபையாரின் இசைப்பாடல்* [capella music] *என்பது புதிய ஏற்பாட்டு சபையின் நடைமுறையாக இருந்தது என்று வரலாறு உறுதிப்படுத்துகிறது.* "A cappella" *என்பது "இந்த வகையிலான" என்று அர்த்தப்படும்* a *மற்றும் "சிற்றாலயம்" என்று அர்த்தப்படும்* cappella *என்ற லத்தீன் வார்த்தைகளில் இருந்து தரவழைக்கப்பட்டுள்ளது. இவ்விதமாக இச்சொற்றொடர்*

தொடக்கத்தில், "சிற்றாலயத்தின்படி அல்லது சிற்றாலயத்தின் வகையில்" என்று அர்த்தப்பட்டது. இவ்வார்த்தை இசைக்கருவிகளின் துணை எதுவுமின்றிப் பாடுதலுக்குப் பயன்படுத்தப்பட்டதென்பது, சிற்றாலயத்தின் அல்லது சபையின் இசை தொடக்கத்தில் இசைக்கருவிகள் எதுவும் இல்லாதிருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.

**சபைக்குழுமத்தின் பாடுதலினால்**

தொடக்ககால சபையார் இசைக்கருவிகளின் இசையைப் பயன்படுத்தாமல் இருந்ததுடன் நின்றுவிடவில்லை, ஆனால் இந்தக் கிறிஸ்தவர்கள் லேவியத்துவப் பாடகர் குழுமுறையின் பாரம்பரியத்தையும் மேற்கொண்டு தொடராதிருந்தனர். பாடுதலில் சபையார் யாவரும் ஈடுபட்டனர் என்பதே மேலே குறிப்பிடப்பட்ட வசனப்பகுதி ஒவ்வொன்றின் மறைவான கருத்தாக உள்ளது. பாடுதல் என்பது சபை முழுவதும் சமநிலையில் பங்கேற்கக்கூடிய ஆராதனையின் வெளிப்பாடாக உள்ளது. சபையானது ஒரு நபரால் ஜெபத்தில் வழிநடத்தப்படுகிறது. ஒரு நபர் பிரசங்கிக்கிறார். நாம் யாவரும் ஒன்றிணைந்து சத்தமாக வாசிப்பதைப் பின்பற்றலாம் அல்லது நாமே வாசிக்கலாம் என்றாலும், பொதுவிதி என்ற வகையில், ஒரு நபர் வேதவசனங்களை வாசிக்கிறார். "பாடலில் யாவரும் பங்கேற்றல் என்பது அதை ஒரு தொடக்கநிலை அல்லது முக்கியத்துவமற்ற அனுபவமாக்க சாய்ந்தாலும், அதே ஒன்றிணைந்து செயல்படுதல், பாடும் சபைக் குழுமத்தினருக்கு, ஆராதனையின் வேறு எந்த தொடர்பு அனுபவத்தினாலும் கொண்டுவர முடியாத ஐக்கியத்தைச் சாத்தியமாக்குகிறது."[8] பாடுதல் என்பது சபை முழுவதையும் பக்திவிருத்தியூட்ட ஒன்றிணைக்கும் கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்டது.

சபையின் இசையை "பாடல் நிகழ்த்தும் நிகழ்ச்சியாக்குதல்" என்ற பிரச்சனை பற்றி ஆன்டி T. ரிட்ச் என்பவர் நியாயமான வகையில் கவலை கொண்டார்.[9] தொழில்முறைப் பாடகர்களால் நிகழ்த்தப்படும் இசைநிகழ்ச்சிகள், கூடிவரும் மக்கள் கூட்டத்தின் கேட்கும் சந்தோஷத்தை நோக்கங் கொண்டவையாக இருக்கையில், ஆராதனைக்கென்று தேவன் வடிவமைத்த விஷயத்திற்கு நேர்மாறானவைகளாக உள்ளன. ஆராதனையில் மக்களிடமாகவோ அல்லது அவர்களின் நிகழ்ச்சிகளினிடமாகவோ கவனத்தை ஈர்க்கும் எந்த ஒரு செயலும் ஆராதனையின் பாக்கியத்தைத் தவறாகப் பயன்படுத்துபவைகளாக உள்ளன. ஆராதனை முழுவதும் தேவனிடத்தில் கவனத்தை ஈர்ப்பதாகவும் அவரை நோக்கியே எல்லாச் சிந்தைகளையும் இருதயங்களையும் இயக்குவதாகவும் இருக்க வேண்டும். ஆராதனை என்பது மக்களுக்கானது. சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் ஆராதனை செயல்முறையில் துடிப்புடன் ஈடுபட வேண்டும்.

## ஜெபத்தின்மூலம் ஆராதித்தல்

ஜெபமானது ஆராதனைக்கு முந்திய தொடக்கச் செயலென்று ஒருக்காலும் நினைக்கப்படக்கூடாது. ஜெபம் என்பது தனிப்பட்டதாக இருப்பினும் அல்லது பொது சபைக்கூடுகையில் செய்யப்பட்டாலும்,

அது தேவனுடன் செய்தித்தொடர்பு கொள்வதற்கான மிக அந்நியோன்ய சாலைகளில் ஒன்றாக உள்ளது. தொடக்ககால சபையானது ஜெபிக்கும் சபையாக இருந்தது. புதிய ஏற்பாடு, தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் பல ஜெபங்களையும், ஜெபம் பற்றிய அறிவுறுத்தல்களையும் கொண்டுள்ளது. ஜெபம் என்பது தேவன் தமது மக்களுக்கு அளித்துள்ள - வேறு எவருக்கும் அளித்திராத - வல்லமைமிகுந்த கருவியாக உள்ளது. "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக்கோபு 5:16ஆ).

"தேவனுடன் பேசுதல்" என்பது ஜெபத்திற்கான மிக எளிய விளக்கமாகும் - ஆனால் அது தேவனுடனான குறிப்பிட்ட வகையிலான பேச்சாக உள்ளது. ஜெபித்தல் என்பது வழக்கமான ஒருவரின் உரை என்பதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. ஜெபித்தல் என்பது ஒருவரே சாதாரணமாக உரையாடுவதற்கும் அதிகமானதாக உள்ளது. ஜெபம் என்பது முழுக்கருத்தில், தேவனுடன் உரையாடுதலாக உள்ளது. KJV வேதாகமத்தில், ஆதியாகமம் 18ல் தேவனுடன் ஆபிரகாம் பேசியது "communing" என்று அழைக்கப்பட்டுள்ளது (ஆதியாகமம் 18:33). அதேபோன்று சீனாய் மலையில் தேவனுடன் மோசே பேசியதும் "communing" என்று குறிப்பிடப்பட்டுள்ளது (யாத்திராகமம் 31:18). இயேசு தமது பிதாவுடன் ஜெபத்தில் பேசுவதற்கு தனிப்பட்ட மலையின்மீது தனியே செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார், சிலவேளைகளில் அவர் இரவு முழுவதும் இவ்வாறு உரையாடினார் (மத்தேயு 14:23; மாற்கு 6:46; லூக்கா 6:12).

ஜெபம் என்பது நாம் தேவனிடத்தில் சில விஷயங்களைக் கேட்கும் வழியாக மாத்திரமே உள்ளது என்று மக்கள் அடிக்கடி நினைக்கின்றனர். விஷயம் அதுவாக உள்ளது, ஆனாலும் அது இன்னும் அதிகமானதாகவும் உள்ளது. இயேசு ஜெபித்ததை உற்று நோக்கிய அவரது சீஷர்களில் ஒருவர், அவரிடத்தில், "ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்துபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும்" என்று கூறினார் (லூக்கா 11:1ஆ). அதற்குப் பதிலுரையாக, இயேசு அவர்களின் சொந்த ஜெபங்களை வடிவமைப்பதில் பின்பற்றக்கூடிய மாதிரி ஒன்றை அவர்களுக்குக் கொடுத்தார். (மத்தேயு 6:9-13ஐயும் காணவும்.) அவரது மாதிரியானது தேவனுடைய நாமத்திற்குத் துதியையும் கனத்தையும் ஏறெடுத்தலுடன் தொடங்கிற்று. "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்பது தேவனுக்கு பயபக்தியையும், மதிப்பையும் வலியுறுத்துகிறது. ஹோமர் ஹெய்லி என்பவர் பின்வருமாறு கூறினார்,

> தேவனுடைய நாமம் என்பது அவருக்குள்ள யாவற்றையும் - அவரது இருப்பு, தேவத்துவம், வல்லமை, மகத்துவம், மற்றும் மகிமை முதலியவற்றை - குறித்து நிற்கிறது. தேவனுடைய நாமத்தை மிகக்கண்டிப்பான பயபக்தியுடன் பற்றிக்கொண்டு இவ்வாறு அழைக்கிற எவரொருவரும், அவர் தமது பண்புகளில் தனித்தன்மையும் மேன்மையும் உடையவராக இருக்கிறார் என்று உணர்ந்தறிந்து

ஒப்புக்கொள்ள வேண்டும்.[10]

இந்த மாதிரியைப் பின்பற்றிய பல மாபெரும் ஜெபங்கள் வேத வசனங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. நெகேமியா தேவனை "உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு, உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே" என்று அழைத்தார் (நெகேமியா 1:5). எஸ்றாவின் மாபெரும் ஜெபமானது (எஸ்றா 9:6-15) தேவனுடைய கிருபையையும் (வசனம் 8), உண்மைத்தன்மையையும் (வசனங்கள் 9, 13), நீதியையும் (வசனம் 15) ஒப்புக்கொண்டது. எஸ்றா மற்றும் நெகேமியா ஆகியோரின் இவ்விரு ஜெபங்களும் மற்றவர்களுக்காக அறிக்கையிடுதலையும் வேண்டுகோள் விண்ணப்பங்களையும் கொண்டிருந்தன. நெகேமியா தமக்காக ஒரே ஒரு விஷயத்தை மாத்திரம் கேட்டார்: அதாவது, அவர் அரசரை அணுகுகையில், அவர்மீது அரசர் பரிவிரக்கமாக இருக்க வேண்டும் என்பதை மாத்திரம் கேட்டார் (நெகேமியா 1:11).

எபேசியர் 3:14-21ல் பவுலின் ஜெபம், தேவனுடைய வல்லமையையும் பராக்கிரமத்தையும் ஒப்புக்கொண்டது (வசனங்கள் 20, 21). எபேசு நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய பலத்தையும், அன்பையும், புரிந்துகொள்ளுதலையும் கொண்டிருக்க வேண்டும், மற்றும் அவர்கள் தேவனால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்த அப்போஸ்தலர் ஏற்படுத்தினார். ஜெபம் என்பது சிலவற்றைக் கேட்பது என்பதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. ஜிம்மி ஜிவிடென் என்பவர் ஜெபம் என்பது "தேவனைத் துதித்தல், வேண்டுகோள் விடுத்தல், மற்றும் மனம் வருந்துதல் ஆகியவற்றிற்கான நமது விருப்பத்தில் இருந்து உதிக்கிற ஆராதனையின் நடவடிக்கையாகும்" என்று விவரித்தார்.[11] மேலும், அவர் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்,

> தேவனைத் துதித்தல் மற்றும் நமக்காகவும் பிறருக்காகவும் வேண்டுகோள்களை ஏற்படுத்துதல் என்பவற்றின்மீதே கவனக்குவிப்பு உள்ளது. நமது தலையில் உள்ள முடிகளின் எண்ணிக்கையைக்கூடக் கணக்கிடுகிறவரும் - விழுகிற சிட்டுக்குருவிகள் ஒவ்வொன்றையும் கூட உணர்ந்தறிகிறவருமான தேவன் - நமது ஜெபங்களைக் கேட்டு அவற்றிற்குப் பதில் அளிக்கிறார் என்று அறிந்து, நாம் அவருக்கு முன்பாகப் பயபக்தியுடன் நிற்கிறோம்.[12]

தேவனுடைய வல்லமையை ஒப்புக்கொள்ளுதல் என்பது நாம் அவரிடம் கேட்கிற ஆசீர்வாதங்களில் சிலவாக உள்ளன, ஏனென்றால் அந்த ஆசீர்வாதங்கள் அவரது வல்லமையின்றி வர இயலாதவைகளாக உள்ளன. யோசுவாவின் புத்தகத்தில் ஜெபத்தைப் பற்றி மனதை அசைக்கக்கூடிய கூற்று ஒன்றுள்ளது. யோசுவா தேவனிடத்தில் இஸ்ரவேலின் இராணுவம் தங்களது விரோதிகளை முற்றிலும் தோல்வி அடையச்செய்யப் போதுமான பகல் வெளிச்சத்தைக் கொடுப்பதற்காக, வானத்தில் சூரியனின் இயக்கத்தை

நிறுத்திவைக்கும்படி கேட்டுக்கொண்டார். தேவன் யோசுவாவின் வேண்டுகோள்களைக் கேட்டு அதற்குப் பதில் அளித்தார். வசனமானது, "இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்நாளையொத்தநாள் அதற்கு முன்னுமில்லை அதற்குப் பின்னுமில்லை; கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம்பண்ணினார்" என்று கூறுகிறது (யோசுவா 10:14).

ஜெபமானது நீதியுள்ளவர்களுக்கு மாத்திரம் கிடைக்கக்கூடிய வல்லமையைத் தூண்டுகிறது. ஜெபம் என்பது ஆராதனையாக உள்ளது; சர்வவல்லவரிடம் வேண்டுகோள் விடுத்தல் என்ற செயலே அவரது ராஜரீக வல்லமையை ஒப்புக்கொள்ளுதலாக உள்ளது. "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" (1 யோவான் 5:14).

ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் ஜெபிக்கும்படி நாம் அறிவுறுத்தப் பட்டிருக்கிறோம் (பிலிப்பியர் 4:6). ஜெபம் என்பது நன்றி செலுத்துதல் அல்லது தேவையில் உள்ள ஒருவருக்காகப் பரிந்து வேண்டுதல் என்பதன் வெளிப்பாடாக இருக்கக்கூடும் (1 தீமோத்தேயு 2:1, 2). ஜெபம் என்பது மன்னிப்புக்கானதாக அல்லது உடல்ரீதியாகவோ, ஆவிக்குரிய வகையிலோ, வியாதிப்பட்டுள்ள சிலருக்கானதாக இருக்கக்கூடும் (யாக்கோபு 5:13, 14, 16; 1 யோவான் 5:16). நமது ஏக்கங்களை வெளிப்படுத்த வார்த்தைகளைக் கண்டறிய இயலாத அளவுக்கு அவை மிகவும் ஆழமானவையாக இருக்கிறபோது, நமது விருப்பங்களை தேவனிடத்தில் எடுத்துரைக்கப் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவுகிறார்.

> அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டுக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார் (ரோமர் 8:26, 27).

## முடிவுரை

தேவன் தமது மகத்துவமான பிரசன்னத்திற்குள் நம்மை வரச்செய்வதற்கு, ஜெபம் மற்றும் துதி ஆகியவற்றின் சாலைகளை நமக்குத் தரும் அளவுக்கு நமது ஆராதனையை விரும்புகிறார். அவரது பிரசன்னத்திற்குள் அனுமதிக்கப்பட்டவர்களாக இருத்தல் என்ற நினைவே ஒரு தாழ்மையான நினைவாக உள்ளது. நாம் அதில் அனுமதிக்கப்பட்டு மாத்திரமல்ல, ஆனால் ஆராதனையில் அவரது சிங்காசனத்தை அணுகுவதற்கு அழைக்கப்பட்டும் இருக்கிறோம். பாடுதல் மற்றும் ஜெபம் என்பவை துதியையும் நன்றி செலுத்துதலையும், நாம் வெளிப்படுத்த தேவன் நமக்காக வடிவமைத்துள்ள இரு வழிகளாக உள்ளன. பாடல்கள் ஜெபம் நிறைந்தவைகளாகவும் இருக்கலாம். நமது பாடல் புத்தகங்களில் உள்ள பல பாடல்கள் ஜெபப்

பாடல்களாக உள்ளன. பாடுதலோ அல்லது ஜெபித்தலோ ஆராதனையின் தொடக்க நிகழ்ச்சிகளாக மாத்திரம் இருப்பதில்லை; மாறாக, இவ்விரு செயல்களுமே, தேவன் இவற்றை வடிவமைத்த வகையில் ஆராதனை யாகவே உள்ளன. ஜேம்ஸ் P. கில்ஸ் என்பவர் ஜெபம் ஆராதனையின் இதயத்துடிப்பாக உள்ளது என்று கருத்துத் தெரிவித்தார்.[13]

ஆராதனையின் இவ்வடிவங்கள், பொது சபைக்கூடுகைகளில் ஜெபங்கள் மற்றும் பாடல்கள் என்பதோடு மட்டுப்படுத்தப்படக் கூடாது. நாம் "இடைவிடாமல் ஜெபம்பண்ணும்படி" போதிக்கப்பட்டுள்ளோம் (1 தெசலோனிக்கேயர் 5:17). அதேபோன்று, நாம் நமது இருதயங்களிலும் நமது உதடுகளிலும் ஆவிக்குரிய பாடல்களைக் கொண்டவர்களாக வாழ்க்கையினூடே கடந்து செல்ல வேண்டும். அவைகள் நமக்கு தேவனிடத்தில் நெருங்கியிருக்கவும், பாதுகாப்பான அளவுள்ள தூரத்தில் சாத்தானை வைக்கவும் உதவும். "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" (மத்தேயு 26:41).

---

குறிப்புகள்

[1]Robert E. Webber, *Worship Is a Verb: Eight Principles for Transforming Worship* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1999), 43. [2]Jack Hayford, *Worship His Majesty* (Dallas: Word Publishing, 1987), 144. [3]Ibid., 147. [4]Aubrey Johnson, *Music Matters in the Lord's Church* (Nashville: 20th Century Christian, 1995), 31. [5]Everett Ferguson, *A Cappella Music in the Public Worship of the Church* (Abilene, Tex.: Biblical Research Press, 1972), 88. [6]Hayford, 149. [7]Ibid., 150. [8]Andy T. Ritchie Jr., *Thou Shalt Worship the Lord Thy God* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1969), 114. [9]Ibid., 113. [10]Homer Hailey, *Prayer and Providence* (Louisville, Ky.: Religious Supply, 1993), 18.

[11]Jimmy Jividen, *More Than a Feeling: Worship That Pleases God* (Nashville: Gospel Advocate Co., 1999), 51. [12]Ibid. [13]James P. Gills, *A Heart Aflame: The Dynamics of Worship* (Tarpon Springs, Fla.: n.d.), 79.